C.C 165/19
PW 1
பெயர் சுஜாதா
தேதி 25.09.23
(எதிரி ஆஜர். )

<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைத்து உறுதிமொழி எடுத்து எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

இவ்வழக்கில் சாட்சியம் அளித்த என் தாயாருக்கு தனியாக வருமான வரி கணக்கு எதுவும் இல்லை என்றால் சரிதான். எனக்கு திருமணத்திற்கு முன்பும் திருமணத்திற்கு பின்பும் தனியாக வருமானம் வரக்கூடிய தொழிலோ, வியாபாரமோ உள்ளதா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் என்னுடைய கையெழுத்து உள்ளதா என்றால் உள்ளது. என்ன காரணத்திற்காக மேற்படி கையெழுத்து செய்தேன் என்றால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து செய்தேன்.எத்தனை கையெழுத்துகள் உள்ளது என்றால் இரண்டு கையெழுத்துகள் உள்ளது. எதற்காக மேற்படி கையெழுத்து போடபட்டது என்றால் ஜீவனாம்சம் மற்றும் குடும்ப வன்முறை சம்மந்தமாக போடப்பட்டது. மேற்படி மனுவை யார் மீது போட்டேன் என்றால் எதிரி மீதும், அவரது அக்கா மீது கொடுக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படுவது எதிரிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பும், குடும்ப வன்முறை விண்ணப்பத்திற்கான நகலும் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் எதசாஆ 10. எதிரியின் அக்கா எங்களுடன் வசித்தாரா என்றால் இல்லை. ஆனால் அவர் பிரச்சனை செய்து வந்தார். இந்த வழக்கில் 2 அபிடவிட்டுகளை எதிரி போலியாக தயார் செய்ததாக தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அபிடவிட்டில் கண்ட சொத்துகள் சம்மந்தமாக சார்பு நீதிமன்றத்தில் சிவில் வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். அதில் கண்ட சொத்தை கிரயம் வாங்குவதற்கு எதிரிக்கு வசதி இருந்தது என்று சார்பு நீதிமன்றத்தில் சாட்சியமளித்துள்ளேன் என்றால் இடம் வாங்குவதற்கு அவருக்கு வசதி இருந்ததாக கூறியுள்ளேன். ஆனால் கட்டிடம் கட்டுவதற்கு நாங்கள் பணம் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் சாட்சியம் தேனி சார்பு நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கில் அளித்த நிரூபணவாக்குமூலம், முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை சாட்சியம் என்றால் சரிதான். அது எதசாஆ.11. 21.11.17ல் நான் அளித்த குறுக்கு விசாரணையில் பக்கம் 3ல் 14 முதல் 17 வரையிலான வரிகளில் கூறியுள்ளவை நான் அளித்த சாட்சியம் தான். ஆனால் இடம் வாங்குவதற்கு அவருக்கு வசதி இருந்ததாக கூறியுள்ளேன். ஆனால் கட்டிடம் கட்டுவதற்கு நாங்கள் பணம் கொடுத்தோம். 21.11.17ல் நான் அளித்த குறுக்கு விசாரணையில் பக்கம் 1ல் 2 முதல் 9 வரிகளில் கூறியுள்ளவை நான் அளித்த சாட்சியம் என்றால் சரிதான். அதற்கு கீழ் இரண்டு வரிகளில் நான் கூறியுள்ள விபரங்கள் உள்ளது. எதிரி திருமணத்திற்கு முன்பிலிருந்து தற்போது வரை வியாபாரம் செயது வருகிறார் என்றால் சரிதான். எதிரிக்கு மது அருந்துதல், புகைப்பிடித்தல், போதை பழக்கம், சூதாடுதல் மற்றும் தகாத பெண் சகவாசம் போன்ற கெட்ட பழக்கவழக்கங்கள் உள்ளதா என்றால் முதல் 4 பழக்கங்கள் இல்லை. 5வதுபழக்கம் உள்ளதா என்று எனக்கு தெரியாது. திருமணமானது முதல் நாங்கள் ஒன்றாக வசித்தோமா எப்போதாவது பிரச்சணை ஏற்பட்டு பிரிந்தோமா என்றால் 2004 வரை என் தகப்பனார் பணம் கொடுத்தவரை எந்த பிரச்சனையும் இல்லை. அதற்கு பிறகு என் தகப்பனாருக்கு வயதாகிவிட்டதால் பணம் கொடுக்கமுடியவில்லை. அதனால் 2004 முதல் 2006 வரை அதிகமான பிரச்சனை ஏற்பட்டது. மேற்கூறிய வழக்கில் கொடுத்த சாட்சியத்தில் பக்கம் 7 வரிகள் 19 முதல் 21 வரை கூறியுள்ள விபரங்கள் சரிதானா என்றால் சரிதான். அறிவிப்பு அனுப்பும் வரை ஐகசமாக இருந்தோம் என்றால் சரிதான். டிசம்பர் மாதத்தில் தான் வழக்கு தாக்கல் செய்தேன். திருமணம் காலம் முதல் எப்போது வரை நானும் எதிரியும் ஒன்றாக வசித்தோம் என்றால் 2011வரை சேர்ந்து வாழ்ந்தோம். 2013ம் வரை வந்துசென்றுக்கொண்டிருந்தேன். எனது மகன் திருமணத்திற்காக வந்து சென்றேன். என்னை போல் கையெழுத்து செய்ததது தான் பிரச்சனையா இல்லை வேறு பிரச்சனை இருந்ததா என்றால் 2004ல் பணம் கொடுக்காததால் பிரச்சனை ஏற்பட்டது. 2004ல் பணம் கொடுக்காததால் பிரச்சனை ஏற்பட்டது சம்மந்தமாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. 2004ல் பணம் கொடுக்காததால் பிரச்சனை இருந்தது என்பதற்காக 3ம் நபர் சாட்சிகள் யாரும் உள்ளனரா என்றால் அவர் இறந்துவிட்டார். எனக்கும் எதிரிக்கும் திருமணமான காலத்திலிருந்து புகார் கொடுக்கும் காலம் வரை எங்களுக்குள் பிரச்சனை எதுவும் இல்லை என்றும் பிரச்சனை இருந்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பொருளாதார ரீதியாக பாதுகாப்பு இல்லை என்று சொன்னதால் தான் எனக்கு நிம்மதி கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்தில் என் பெயரில் சொத்துகளை எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. தானசெட்டில் மெண்ட் ஆவணத்தில் என்ன காரணத்திற்காக ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. தானசெட்டில் மெண்ட் பத்திரத்தின் அசல் என்னிடம் கொடுக்கப்படவில்லை எதிரி தான் வைத்துள்ளார். சொத்து சம்மந்தமான

மூல ஆவணங்களை என்னிடம் கொடுக்கவில்லை. மேற்படி வழக்கில் குறுக்கு விசாரணை பக்கம் 7 ல் கூறியுள்ள அபிடவிட்டு என்பது இந்த வழக்கில் சம்மந்தபட்ட அபிடவிட்டு என்றால் சரிதான். மேற்படி சாட்சியத்தில் அபிடவிட்டை நேரில் பார்க்கவில்லை என்று கூறியுள்ளேன். அதற்கு பின்பு தான் கமிசனர் அலுவலகத்தில் அதை காண்பித்தார்கள். மேற்படி வழக்கில் 21.11.17 குறுக்கு விசாரணை சாட்சியமளித்துள்ளேன். மேற்படி குறுக்கு விசாரணையில் 9.9.13 பிறகு தான் எதிரியுடன் பேச்சுவார்த்தை இல்லை என்று கூறியுள்ளேன். 15.12.11 ல் தானசெட்டில் மெண்ட் இரத்து செய்யும் வரை என்னுடன் தான் ஒன்றாக இருந்தோம் என்றும், என்னுடைய சமையலை தான் எதிரி சாப்பிட்டுக்கொண்டிருந்தார் என்று கூறியிருந்தேன் என்றால் நான் திருச்சியிலிருந்து வந்து சென்றுக்கொண்டிருந்தேன். தற்போது ஒரே வீட்டில் ஒன்றாக வசிக்கிறோம் என்றால் அவர் ஒரு பகுதியிலும், நான் ஒரு பகுதியிலும் வசித்துவருகிறோம். எனக்கு ஒரு மகன், மகள் இருக்கிறார்கள் என்றும் இருவருக்கும் திருமணமாக குழந்தைகள் உள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி வீட்டை எங்கள் காலத்திற்கு பிறகு எனது பேரபிள்ளைகளுக்கு எழுதி வைக்க நான் மறுப்பு தெரிவித்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் தீர்ப்பு ஏற்பட்ட பிறகு கூறினார். தேனி சார்பு நீதிமன்ற வழக்கு விசாரணையின் போது மேற்படி கேள்வி கேட்கப்பட்டு அது சாட்சியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கு தவிர வேறு எந்த முன் வழக்கிலும் தீர்ப்பு வழங்கபடவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கில் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகு கூறியதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. வழக்கிற்கு முன்பும் சொன்னார், பின்பும் சொன்னார். பெற்றோர் பணம் தரவில்லை என்பதற்காக எதிரி என்னுடன் சண்டைப்போட்டு என்னை மனஉளைச்சலில் வைத்திருந்தார் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு தேவையான பலசரக்கு பொருட்களை எதிரி தான் வாங்கி தருகிறார் என்றால் சரியல்ல. தற்போது வரை நான் சமைத்து கொடுப்பதை எதிரி சாப்பிடுகிறார் என்றால் சரியல்ல. நான் கூறும் போர்ஜெரி அபிடவிட்டு எங்கு தயார் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. அபிடவிட்டில் யார் கையெழுத்து செய்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் முனிசிபல் ஆபிசில் சொன்னார்கள். நான் எதிரி கையெழுத்திட்டதை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். சொத்து எனக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த பின்பு நான் வேறு ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் 2012 ல் எனது பிள்ளைகள் பெயரில் அக்ரிமெண்ட் ஏற்படுத்தினேன். மேற்படி அக்ரிமெண்டை கிரயம் செய்துக்கொடுக்கவேண்டும் என்ற எண்ணத்தில் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான். குழப்பம் ஏற்படுத்தவேண்டும் என்று எழுதி வைத்தேன். தானசெட்டில்மெண்டை இரத்து செய்ததால் பொருளாதார ரீதியாக நஷ்டம் ஏதும் ஏற்பட்டதா என்றால் இல்லை. வேறு என்ன வகையான பாதிப்புஏற்பட்டது என்றால் போலீச்ஸ்டேன் கோர்ட் என அலைய வைத்தது மனஉளைச்சல் ஆனது. அபிடவிட்டை எதிரி கையெழுத்து செய்தார் என்பதற்கு வேறு ஏதேனும் சாட்சி உள்ளது என்றால் முனிசிபல் ஆபிசில் சொன்னதுதான். அபிடவிட்டை எதிரி தான் சென்று கொடுத்தார் என்பதை நான் பார்த்தேனா என்றால் இல்லை. சொத்தையோ, சொத்து சம்மந்தமான எதையும் பாதுகாப்பாக வைத்திருக்கும்படி எதிரியிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. அசல் ஆவணங்களை அவர் தான் வைத்திருந்தார். வீட்டை இப்படி தான் உபயோகப்படுத்தவேண்டும் என்று ஏதேனும் கட்டுப்பாடு விதித்தேனா என்றால் இல்லை. எதிரி என்னிடம் இல்லாத ஒன்றை இருக்கும் மாறு கூறியுள்ளாரா என்றால் சொத்து சம்மந்தமாக எதுவும் இல்லை. பிரச்சனை என்பது என் தாயார் தலையிட்ட பின்பு தான் வந்தது என்றால் சரியல்ல. 2012 காலம் தொடர்புடைய காலகட்டத்தில் என்னுடைய கையெழுத்து உள்ள பதிவு ஆவணங்கள் அரசு தொடர்பான ஆவணங்கள் வங்கி தொடர்பான ஆவணங்கள் உள்ளதா என்றால் இருக்கலாம். கிரய பத்திரத்தை பதிவு செய்வதற்கு பத்திர அலுவலகத்தில் நான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். வங்கியிலும் நான் கையெழுத்து போட்டு வரவு செலவு செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி காலகட்டத்தில் நான் கையெழுத்த செய்த ஆவணம் உள்ளது என்று காவல்துறைக்கு தெரியப்படுத்தி அதனை ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. நாங்கள் சேர்ந்து வாழ்ந்த காலத்தில் பராமரிப்பு செலவுகளை யார் செய்தார்கள் என்றால் பாதி எதிரி செய்தார். பாதி எனது பெற்றோர் வீட்டிலிருந்து செய்தார்கள். மேற்படி வீட்டை விட்டு என்னை வெளியேற்ற 2004 ல் முயற்சி செய்தார். தானசெட்டில் மெண்ட் எழுதியபிறகு என்னை வெளியேற்ற முயற்சி செய்தாரா என்றால் இல்லை. நான் சொத்தை எதிரியின் சம்மதம் இல்லாம் 3 ம் நபருக்கு வாடகைக்கு விடவும், கிரயம் செய்ய முயற்சி செய்தேனா என்றால் வாடகைக்கு விட முயற்சி செய்தேன். வாடகைக்கு விட முயற்சி செய்தது வழக்கிற்கு முன்பா அல்லது பின்பா என்றால் வழக்கு போட்ட பின்பு தான். வாடகைக்கு விடுவதற்கு எதிரியிடம் ஒப்புதல் கேட்டேனா என்றால் இல்லை. வாடகைக்கு விட முயற்சி செய்த காலத்தில் எதிரி அந்த வீட்டில் இருந்தாரா என்றால் அவர் ஒரு பகுதியில் இருந்தார. நகராட்சியில் நான் கையெழுத்து செய்த அபிடவிட்டை நானாக சென்று தான் கொடுத்தேன் என்றும் தற்போது எதிரி கையெழுத்து செய்து கொடுத்ததாக பொய் சாட்சி அளக்கிறேன் என்றால் சரியல்ல. இரத்து செய்யப்பட்ட தானசெட்டில் மெண்ட் பத்திரத்தில் எதற்காக இரத்து செய்யப்பட்டது

என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் நகராட்சியில் அபிடவிட்டு எழுதி கொடுத்த பிறகு என் தாயாரின் துர்போதனையின் அடிப்படையில் இவ்வாறு நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் தாயாருக்கும் எதிரிக்கும் இடையிலான உறவு சுமூகமாக இருந்ததா என்றால் ஆரம்ப கட்டத்தில் சுமூகமாக இருந்தது. எதிரி மேற்படி வீட்டை வாடகைக்கு விடவோ விற்பனை செய்ய முயற்சிசெய்தாரா என்றால் தானசெட்டில் மெண்ட் பத்திரத்தை இரத்து செய்த பிறகு அபிடவிட்டு தாக்கல் செய்துவிட்டு விற்க முயற்சி செய்தார். அதற்கான சாட்சிகள் யாரும் இல்லை. ஆவணம் எதுவும் இல்லை. அருகில் இருந்தவர்கள் கூறினார்கள். எதிரி வீட்டை விற்கவோ, வாடகைக்கு விடவும் முயற்சி செய்தது இல்லை என்றால் சரியல்ல. என் தாயார் சொத்தை விற்று பணத்தை எடுத்துக்கொண்டு என்னை அவர் ஊருக்கு அழைத்து செல்லவேண்டும் என்ற எண்ணத்தில் என்னை தூண்டிவிட்டார் என்றால் சரியல்ல. நான் என் தாயாரின் தூண்டுதலின் காரணமாக எதிரி மீது பொய்புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி தற்போது வரை எனக்கு ஜீவனாம்சம் கொடுத்து பராமரித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிப்பதால் என் சாட்சியம் நிராகரிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. எதிரி தவறு ஏதும் பண்ணவில்லை என்றால் சரியல்ல.